<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 113/2023**

2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய ராஜாராமன் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.11.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ராஜாராமன் | | |
| Father /Husband Name | : | வைத்தியநாதசுவாமி | Court | : |
| Village | : | செம்பனார்கோவில் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 56 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 08.08.1963 | வாதிகளின் தகப்பனார் வைத்தியநாதசுவாமி பெயரில் உள்ள கிரய ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 06.05.2002 | வாதிகளின் தகப்பனார் எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 24.01.2004 | வைத்தியநாதசாமியின் இறப்பு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 05.07.2007 | சென்னை உயர்நீதிமன்ற W.P.No. 26753/2014 –ன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 5. | 21.01.2023 | வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | 23.01.2023 | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை (எண்ணிக்கை-4) **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.